காரணம் வேலை வாய்ப்பு போன்றவற்றிற்கு 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி., 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. ஆகிய இரண்டும் ஒன்றுதான். மேல்நிலைப்பள்ளி பொதுத் தேர்வை 18 வயது முடிந்தவர்கள் தனிப்பட்ட முறையில் எழுதுவதற்கும் 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி., 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. இரண்டும் ஒன்றுதான்.

7. இதிலிருந்து "1969 திட்ட எஸ்.எஸ்.எல்.சி."-யை இன்னும் தேறாமல் இருப்பவர்கள் தேர்ச்சி பெற அரசு வழிவகை செய்துள்ளது.

இணைப்பு II.

[2 ஆம் பக்கத்தில் இனம் 6 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

உதவி வேளாண்மை அலுவலர்கள் சங்கமும், வயல் விளக்க அலுவலர்கள் சங்கமும் கீழ்க்கண்ட ஏழு கோரிக்கைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் 23—1—1981 அன்று ஒரு அணியும், 24—1—1981 அன்று உண்ணா நோன்பும் இருந்தனர் :—

(1) சம பொறுப்பில் சம வேலை செய்துவரும் பதவி உயர்வு பெற்ற துணை வேளாண்மை அலுவலர்களுக்கு மீண்டும் சம ஊதியம், ஒரே பதவிப் பெயர், பணிதொகுதி முதலியவற்றை திரும்ப அளிக்கக் கோரல்.

(2) 10 ஆண்டு பணி முடித்து, அரசின் விதிமுறைப்படி எட்டாம் வகுப்பு தேர்ச்சி அடைந்த அனைத்து வயல் விளக்க அலுவலர்களை உதவி வேளாண்மை அலுவலர் நிலை II ஆக உயர்த்தக் (Upgrading) கோரல்.

(3) 10 ஆண்டு பணி முடித்த உதவி வேளாண்மை அலுவலர்கள் அனைவர்க்கும் ரூபாய் 450 அடிப்படை ஊதிய விகிதத்தில் "தேர்வு நிலைப்" பதவிகள் அளிக்கக் கோரல்.

(4) அனைத்து வயல் விளக்க அலுவலர்களின் அடிப்படை ஊதியத்தை ரூபாய் 250-இலிருந்து ரூபாய் 310 ஆக உயர்த்தி அளிக்கக் கோரல்.

(5) உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு வேளாண்மை அலுவலர்களாக பதவி உயர்வு விகிதாச்சாரம் 10 சதவிகிதத்திலிருந்து 25 சதவிகிதமாக உயர்த்தி அளிக்கக் கோரல்.

(6) 10 ஆண்டு பணி முடித்த வயல் விளக்க அலுவலர்களுக்கு அடிப்படை ஊதியம் ரூபாய் 350 நிலையில் தேர்வு நிலை பதவிகள் அளிக்கக் கோரல்.

1981 மார்ச் 2]

(7) தங்கள் கூட்டமைப்புக் கோரிக்கைகளுக்கு தடையாக இருந்துவரும் மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர் திரு. மாணிக்கம் அவர்களை மாற்றி வேளாண்மைப் பட்டதாரி அல்லாத ஓர் அலுவலரை நேர்முக உதவியாளராக நியமிக்கக் கோரல்.

2. கோரிக்கைகளும் அவைகள் மேல் அரசு எடுத்த நடவடிக்கைகளும் பின் வருமாறு :—

கோரிக்கை 1.—பதவி உயர்வு பெற்ற துணை வேளாண்மை அலுவலர்களுக்கும், பட்டம் பெற்று நேரிடையாக அமர்த்தப்படும் துணை வேளாண்மை அலுவலர்களுக்கும் 1962 வரை ஒரே ஊதிய விகிதம் இருந்தது. முதல் சம்பளக் குழுவின் அறிக்கைக்குப் பிறகு இவ்விரு பணியாளர்களுக்கும் வேறான ஊதிய விகிதம் அளிக்கப்பட்டு, இவ்வேறான ஊதிய விகிதம் நியாயமானதே என்று இரண்டாவது மற்றும் மூன்றாவது சம்பளக் குழுவினால் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. மூன்றாவது சம்பளக் குழு, சங்கங்களின் கோரிக்கைகளை ஆராய்ந்து, பதவி உயர்வு பெற்றவர்களைவிட வேளாண்மைக் கல்லூரியில் படித்து பட்டம் பெற்றவர்கள் அதிகத் திறமையும் அறிவும் பெற்றுள்ளவர்களாக இருப்பதால், இருவருக்கும் ஒரே ஊதிய விகிதம் இருக்க நியாயமில்லை எனக் கூறியுள்ளது. இக்கோரிக்கை மீண்டும் மூன்றாவது ஊதியக் குழுவிற்குப்பின் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழுவின் பரிசீலனைக்கு விடப்பட்டுள்ளது.

ஒரே பதவிப் பெயர்.—பட்டம் பெற்று நேரிடையாக வேலைக்கு அமர்த்தப்படுபவர்கள் அவர்களுடைய ஊதிய விகிதங்களின் அடிப்படையில் தற்போது ஸ்டேட் சர்வீஸில், 'B' பிரிவு அரசு ஊழியர்களாக உள்ளார்கள். பதவி உயர்வு பெற்றவர்கள் தற்போது சார்நிலை (Subordinate Service) பணித் தொகுதியில், 'C' பிரிவு அரசு ஊழியர்களாக உள்ளார்கள். தனித்தனி விதிகளின்கீழ் வருவதாலும், தனித்தனி சம்பள விகிதம் உள்ளதாலும், இருவருக்கும் ஒரே பதவிப் பெயர் இருந்தால், இரு பிரிவினருக்கும் வேறுபாடு அறிய தடுமாற்றம் ஏற்படுமாதலால் நன்றாக ஆராய்ந்த பிறகு, பட்டம் பெற்று 'B' பிரிவில் உள்ளவர்களுக்கு "வேளாண்மை அலுவலர்" என்றும், பதவி உயர்வு பெற்றவர்களுக்கு 'துணை வேளாண்மை அலுவலர்' என்றும் பதவிப் பெயர்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஒரு நபர் குழு இவ்வலுவலர்களுக்கும் ஒரே ஊதிய விகிதத்தை ஏற்குமானால், பதவிப் பெயர் மாற்றம் மறுபரிசீலனை செய்யப்படும்.

கோரிக்கை 2.—வயல் விளக்க அலுவலர் பதவியில் நிலை I, நிலை II என இரண்டு நிலைகள் உள்ளன. இவ்விரு நிலைகளிலும் உள்ள வயல் விளக்க அலுவலர்கள், மொத்தமுள்ள உதவி வேளாண்மை அலுவலர் பதவிகளின் 30 சதவிகிதம் வரை, உதவி வேளாண்மை அலுவலராக பதவி உயர்வு

பெறலாம். நிதித் துறையின் 5—10—1978 நாளிட்ட அரசாணை 1050-ல் குறிப்பிட்டுள்ள விதிகளின்படி, 10 ஆண்டுகள் பணிமுடித்த, வயல் விளக்க அலுவலர்கள் நிலை II-லிருந்து, நிலை I-க்கும், வயல் விளக்க அலுவலர் நிலை I-லிருந்து, உதவி வேளாண்மை அலுவலர் நிலை II -ற்கும். நிலை உயரலாம். வயல் விளக்க அலுவலர் பதவியிலிருந்து பதவி உயர்வு பெற, தற்போது இருக்கும் 30 சதவிகிதத்தினை அதிகமாக்கும் குறிப்பு ஒன்று அரசின் பரிசிலனையில் உள்ளது.

கோரிக்கைகள் 3, 4.—இக்கோரிக்கைகள் ஒரு நபர் குழுவிற்கு அனுப்பப் பட்டன. ஒரு நபர் குழுவின் அறிக்கை அரசு நிதித் துறையின் பரிசிலனை யில் உள்ளது. குழுவின் பரிந்துரைகள் தெரிந்தபின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

கோரிக்கை 5.—இக்கோரிக்கை அரசின் பரிசிலனையில் உள்ளது.

கோரிக்கை 6.—வயல் விளக்க அலுவலர் நிலை I-ன் ஆரம்ப ஊதியம் ரூபாய் 280, உதவி வேளாண்மை அலுவலர் நிலை II-ன் ஆரம்ப ஊதியம் ரூபாய் 350. பத்து ஆண்டு பணிமுடித்த வயல் விளக்க அலுவலர்களே உதவி வேளாண்மை அலுவலர் நிலை II-க்கு உயரலாம். வயல் விளக்க அலுவலர் களுக்கு உதவி வேளாண்மை அலுவலர்களின் ஆரம்ப ஊதியம் அளிக்க இயலாது.

கோரிக்கை 7.—இது முழுவதும் நிர்வாக சம்பந்தமுள்ளது. எந்த சங்கமும் யாரை உதவியாளராக அமர்த்த வேண்டுமென அறிவுரை கூற முடியாது.

இணைப்பு III

[23 ஆம் பக்கத்தில் இனம் 6 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 9 of 1981.

(As passed by the Assembly.)

A Bill further to amend the Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Act, 1976.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-second year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Co-operative Societies (Appointment of Special Officers) Amendment Act, 1981.